**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | DVC.9/2024 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | ம.சா.1 |
| Name : | அமினாபீ |
| Father Name/ Husband Name : | அபுசாலிஹ் |
| Village : | முகம்மது பட்டினம் |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 40/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 07.08.2026

**(1969-ம் ஆண்டின் 54வது விதியில் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

கடந்த 2018, 2019, 2020 மற்றும் 2021ம் வருடங்கள் 1ம் எதிர்மனுதாரர் எனது இரண்டு பெண் குழந்தைகளுக்கு பள்ளி கட்டணம் செலுத்தியுள்ளார் என்றால் சரிதான். 2020ம் வருடம் சகிலா என்ற பெண்ணை 1ம் எதிர்மனுதாரரான எனது கணவர் திருமணம் செய்து கொண்டதாகவும், அந்த பெண்ணின் பெயருக்கு சொத்தையெல்லாம் எனது கணவர் மாற்ற போவதாகவும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் என்னை குடும்ப வன்முறை செய்தார்கள் என்பதெல்லாம் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல, உண்மையை தான் சொல்லியுள்ளேன். நான் அனைத்து மகளில் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் மீது நடவடிக்கை எடுக்கவிடாமல் 4ம் எதிர்மனுதாரர் தடுத்தார் என்பது பொய் என்றால் சரியல்ல. நான் 5ம் தேதி கொடுத்த புகாருக்கு போலிசார் விசாரணை செய்த பிறகு 6ம் தேதியே நான் சமாதான வாக்குமூலத்தை எழுதிக் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு கொடுக்கப்பட்ட சீர்வரிசை பொருட்கள் அனைத்தையும் எதிர்மனுதாரர்களிடமிருந்து நான் பெற்று கொண்டேன் என்றால் பாதி சீர்வரிசை பொருட்களைத்தான் நான் பெற்று கொண்டேன். நான் 05.01.2024ம் தேதி காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் மீதான

விசாரணைக்கு 1ம் எதிர்மனுதாரர் ஒத்துழைக்கவில்லை என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல.

அலாவுதீன் என்ற நபருடன் எனக்கு திருமணத்திற்கு மீறிய உறவு இருப்பதால் தான் 1ம் எதிர்மனுதாரருடன் நான் சேர்ந்து வாழாமல் இருக்கிறேன் என்றால் சரியல்ல. கணவரால் கைவிடப்பட்ட பெண் என்று சொல்லி ஜமாத் மூலம் நான் உதவிகள் பெற்று வருகிறேன் என்றால் சரியல்ல. எந்த நியாயமான காரணங்களுமின்றி நான் வேண்டுமென்றேதான் 1ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழாமல் இருக்கிறேன் என்றால் சரியல்ல, நான் சேர்ந்து வாழதான் ஆசைப்படுகிறேன், 1ம் எதிர்மனுதாரர் தான் வேறொரு பெண்ணுடன் வாழ்ந்து வருகிறார். உண்மையிலேயே 1ம் எதிர்மனுதாரருடன் நான் சேர்ந்து வாழ நினைத்திருந்தால் அதற்கான மனுவை உரிய நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் நானும், என் பிள்ளைகளும் போன் மூலம் சேர்ந்து வாழும்படி 1ம் எதிர்மனுதாரரிடம் பேசினோம். 1ம் எதிர்மனுதாரர் தனது குழந்தைகளை பார்க்க வரும்போது நான் பார்க்கவிடாமல் தடுக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தான் 1ம் எதிர்மனுதாரரான எனது கணவருடன் எந்த குடும்ப உறவும் வைத்து கொள்ளாமல் தனித்து வாழ்ந்து வருகிறேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் எங்களின் குழந்தைகளை பராமரிக்க தயாராக தான் இருக்கிறார் என்றால் அவர் பார்த்துக்கொண்டால் எனக்கும் விருப்பம் தான். நான் எதிர்மனுதாரர்கள் மீது வேண்டுமென்றே பொய்யான காரணங்களை கூறி குடும்ப வன்முறை வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.